**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(26.04.2025 முதல் 30.04.2025)**

**அறிக்கை எண் 08/2025** **தேதி. 25.04.2025**

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

நாகப்பட்டினம் மாவட்டத்தின் 22.04.2025 மற்றும் 24.04.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 35 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3 - 11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை நாகப்பட்டினம் (26.04.2025 முதல் 30.04.2025)

| கடந்த வார வானிலை (22.04.2025 மற்றும் 24.04.2025) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 30.04.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 22/04 | நாள்-2 23/04 | நாள்-3 24/04 | தேதி | நாள்-1 26/04 | நாள்-2 27/04 | நாள்-3 28/04 | நாள்-4 29/04 | நாள்-5 30/04 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 2 | 4 | 0 | 2 |
| 35 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 35 | 35 |
| 29 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 28 | 29 | 29 |
| 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 5 | 5 | 6 | 6 |
| 72 | 76 | 74 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 70 | 74 | 63 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| 7 | 3 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 16 | 14 | 20 | 22 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தெற்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தென் தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 26.04.2025, 27.04.2025, 28.04.2025 மற்றும் 30.04.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 - 35 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14 - 22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். |
| நெல் | நாற்றாங்கால் | கோடை பருவத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் இரகங்களான ஆடுதுறை 53, ஆடுதுறை 56, ஆடுதுறை 57 மற்றும் ஆடுதுறை 59 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |

| | | |
|---|---|---|
| **பயறுவகை பயிர்கள்** | **விதைப்பு** | கோடை இறவை பயிராக சித்திரைப்பட்டத்தில் ( ஏப்ரல் - மே) பயறுவகை பயிர்களை விதைக்க உகந்த இரகங்களான ஆடுதுறை 5, வம்பன் 5, வம்பன் 6 மற்றும் வம்பன் 8 போன்ற உளுந்து இரகங்களையும் வம்பன் 2 மற்றும் வம்பன் 3 போன்ற பாசிப்பயறு இரகங்களையும் பயிரிடவும். |
| | **அறுவடை** | உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும். ஒரிரு நாட்கள் செடிகளை நன்கு வெயிலில் காயவைத்து பின்பு பயறைப் பிறித்தெடுத்து சுத்தம் செய்து ஈரப்பதம் **9** சதவீதத்திற்கு குறையும் வரை உலர்த்தி பின்பு சேமிக்கவும் |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **ஆடு மற்றும் மாடு** | **3** மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் **2** மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |
| | | அடுத்த சில தினங்களுக்கு பகல் நேர வெப்ப நிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் தங்களின் கால்நடைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் மேய விடுவதுடன் நண்பகல் நேரத்தில் நிழல் பகுதியில் நிறுத்தி வைக்கவும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும்.

**இயக்குநர்**

•